உ
சிவமயம்

# அச்சிறுபாக்கம்
# அருள்மிகு இளங்கிளிஅம்மன் சமேத
# ஆட்சீஸ்வரர் திருக்கோயில்

# வரலாறு



T10812
R003H03

வெளியிடுவோர் :
பதாம் நாள் விழாக் குழுவினர்

அச்சிறுபாக்கம்

# அருள்மிகு இளங்கிளிஅம்மன் சமேத ஆட்சீஸ்வரர் திருக்கோயில்

# வரலாறு




24–4–1975

விலை ரூ. 2–00

வெளியிடுவோர் :

ஒன்பதாம் நாள் விழாக் குழுவினர்

# கேளீர்,......ஒரு சொல் கேளீர் !

தெய்வத் தமிழ் நாட்டின் மொத்த சிவாலயங்கள் ஆயிரத்து எட்டு என்பர். அவற்றுள் தேன் சுவை கூட்டும் தேவாரப் பாடல்கள் பெற்றவை, இருநூற்று எழுபத்து நான்கு தொண்டை நன்னாட்டில் மட்டும் முப்பத்து இரண்டு உள. அவற்றுள் ஒன்றே இன்முகப் பார்வையால் இவ்வுலகை ஆளும் இளங்கிளி அம்மையை உடன் கொண்டிருக்கும் ஆட்சிகொண்டார் திருக்கோயில்.

இந்தக் கோயிலின் சிறப்புகளை மக்கள் இடையில் பரப்புதல் வேண்டும் என்பது ஒன்றே, எங்கள் நோக்கம்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பே துவங்கிய இந்த முயற்சி இறையருளால் இப்போதுதான் கை கூடுகிறது. இதில் எவ்வளவோ குறைகளும் நிறைகளும் இருக்கலாம். தூய நல்ல மனம் படைத்த பெரியோர்கள் சுட்டிக்காட்டினால் நன்மை பயக்கும்.

இதனை தொகுத்துத்தந்த **புலவர் தாமரைக்கண்ணன்** அவர்களுக்கும் அறிமுகவுரைநல்கிய மேதகு **இரா. நாகசாமி** எம். ஏ., அவர்களுக்கும், அணிந்துரை கொடுத்து உதவிய மேதகு ***அ. முனுசுவாமி முதலியார்*** அவர்களுக்கும், இதனை அழகுற அச்சிட்டுத்தந்த அச்சிறுபாக்கம் ***ஜெமினி எண்டர் பிரைஸஸினருக்கும்*** மிகுந்த நன்றி.

இந் நூல் வெளியிடுவதற்குப் பல்லாற்றானும் துணைபுரிந்த பள்ளிப்பேட்டை திரு **க. முனுசாமி நாயகர்**, அச்சிறுபாக்கம் திரு **எம். கோதண்டராம ரெட்டியார்**, மதுராந்தகம் திரு ***K. ஆறுமுக நாயகர்*** ஆகியோர்களுக்கும் இதயம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

இவ்வண்ணம்,

***போ. சரவண நாயகர்***,

தலைவர், ஒன்பதாம் நாள் விழாக்குழு.



அருள்மிகு இளங்கிளி அம்மன் சமேத அருள்மிகு ஆட்சீஸ்வரர்

திருக்கோயில் இராஜகோபுரம்



அருள்மிகு இளங்கிளி அம்மன் சமேத அருள்மிகு ஆட்சீஸ்வரர் கல்யாண மண்டப திருக்காட்சி



அருள்மிகு இளங்கிளி அம்மன் சமேத ஆட்சீஸ்வரர் 9-ம் நாள் விழா திருவீதி உலாக் காட்சி

நூல் வெளியிடும் :

சென்னை
உயர் நீதிமன்ற நீதிபதி

மேதகு **எஸ். மகராஜன்,
B.Sc, B.L.,**

அவர்கள்





தலைமை :

அச்சிறுபாக்கம்
தொகுதி சட்ட மன்ற
உறுப்பினர்

மாண்புமிகு

**வை. பாலசுந்தரம்**

அவர்கள்

தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் குழுவின்
துணைச் செயலாளர்

சிவநெறிச் செல்வர்... சித்தாந்த கலாநிதி...
முதுபெரும் சமய வள்ளல்

வித்வான் அ. முனுசாமி முதலியார் அவர்களின்

# அணிந்துரை

தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

திருநாட்டிலேதான் முதன் முதலில் திருக்கோயில்கள் தோன்றின. காலத்தால் அழியாது, என்றும் நின்று நிலவுவது கோயிற் கற்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களே. இதனுல்தான் 'கல்மேல் எழுத்துக்கு நேர்' என்ற பூட்கை தோன்றியது.

இனிய வரலாறுகளை நமக்கு உணர்த்தும் சிறந்த கல்வெட்டுகளையும், அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயிலைப் பற்றிய செய்திகளையும் ஏனைய வரலாற்றுக் குறிப்புகளையும் கொண்டது, இந்த நூல்.

இதனை அழகிய இனிய முறையில் எழுதியுள்ள புலவர் **திரு தாமரைக்கண்ணன்** அவர்களைத் தமிழ் உலகம் நன்கு அறியும். அவருடைய எழுத்து ஆற்றலும் பேச்சு ஆற்றலும் நல்லறிவுபடைத்த திறனாளர்களைக் கவர்ந்து வருகின்றன இறைவன் அவருக்கு எல்லா நலன்களும் அருளுவானாக.

மேலும், ஒன்பதாம் நாள் விழாக் குழுவின் தலைவர் உயர்திரு **போ. சரவண நாயகர்** அவர்களின் பெரு முயற்சியால் இந்த நூல் வெளிவருகிறது. ஆண்டாண்டு காலத்திற்கும் பயனுள்ள வகையில் இதனை வெளியிடும் அவருடைய தொண்டுள்ளத்தையும் இறை பக்தியையும் பாராட்டி மகிழ்கிறேன்.

20—4—75
சென்னை-2.

இன்னணம்,
**அ. முனுசாமி முதலியார்.**

தமிழ்நாடு அரசு

தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநரும்

கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞரும்

சிறந்த சிந்தனையாளருமாகிய

நற்றமிழ் வல்லுநர் இரா. நாகசாமி, எம். ஏ., அவர்கள்

இதயங்கனிந்து அளித்த

# அறிமுகவுரை

ஒரு கோயிலின் வரலாற்றை அக் கோயிலை மையமாக் கொண்டு எழுந்துள்ள இலக்கியங்கள் வழிபாடுகளைக் குறிக்கின்றன. இவற்றைக் காட்டிலும் அங்குள்ள கல்வெட்டுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

அச்சிறுபாக்கத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன். இக் கோயிலுக்கு 1. ராஜேந்திரன், 2. வீரராஜேந்திரன், 3. முதல் குலோத்துங்கன், 4. விக்ரம சோழன், 5. இரண்டாம் குலோத்துங்கன், 6. இரண்டாம் ராசராசன், 7. சுந்தர பாண்டியன், 8. விக்ரம பாண்டியர், 9. வீர பாண்டியர், 10. கம்பண்ணன், 11. புக்கர், 12. கிருஷ்ண தேவராயர் முதலிய சிறந்த மன்னர் காலத்தெல்லாம் தானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை நமக்கு எடுத்துரைப்பவை கல்வெட்டுகள் தாமே!

இங்கு எவ்வளவு சிற்றரசர்கள் இருந்திருக்கிறார்கள் என்று கல்வெட்டு கூறுகிறது.

1. ஆதமங்கல விண்அரையன், 2. பாண்டி நாடு கொண்டான் கண்டரகூளியான இராசராச சம்புவராயன், 3. குலோத்துங்க சோழ சம்புவராயன், 4. திருவெண்காடு தேவனான பல்லவரையன், 5. ராஜ நாராயண சம்புவராயன் முதலிய இவர்கள் எல்லோரும் அச்சிறுபாக்கத்துப் பெருமா

னிடத்தில் அளவிலா பக்தி பூண்டவர்கள். விஜய நகரப் பெரு மன்னன் கிருஷ்ண தேவராயருக்காக இக் கோயிலில் வழி பாட்டுக்கு நிலம் அளிக்கப்பட்டது.

இப்பொழுது ஆட்சீஸ்வரர் என்று அழைக்கப்படும் பெருமானை ஆட்சிகொண்டருளிய மகாதேவர் என்றும்; அன்னையின் பெயரை இளங்கருணைப் பாவை என்றும் கல் வெட்டுக் கூறுகிறது. "பொய்யோடு உறவிலாதான், தழுவக் குழைந்தான்" என்பன இருவர் பெயர். எவ்வளவு இனிமை யான பெயர்கள்!

இச் செய்திகளை நமக்குக் கூறும் இக் கல்வெட்டுகளை, வரலாற்றிலே ஊன்றி வரலாற்று நிகழ்ச்சிகளை சுவைபட பல நாடகக் காப்பியங்களாகவும் கதைகளாகவும் படைத்துப் பெரும் புகழ் படைத்த நண்பர் திரு **தாமரைக்கண்ணன்** வரலாற்று நோக்கிலேயே ஆர்வத்தோடு நூலாகத்தொகுத்து நமக்குப் பெரும் விருந்தளித்துள்ளார். நண்பர்தம் ஆர்வமும் ஊக்கமும் இதுபோன்ற பல வரலாற்று நூல்கள் வர வழி வகுக்கும் என்று நம்புகிறோம்.

வரலாற்று நூலோ, கல்வெட்டு நூலோ போடத்தயங்கும் தமிழகத்தில், கோயில் கல்வெட்டுகள் அனைத்தையும் தொகுத்து பொருட் செலவையும், அதிகமான உழைப்பையும் பொருட்படுத்தாமல், இந்த அழகிய நூலைப் பதிப்பித்துள்ள ஒன்பதாம் நாள் விழாக் குழுத் தலைவர் திரு **போ. சரவண நாயகர்** அவர்களை மனமார பாராட்டுகிறோம் வாழ்த்துகிறோம்.

சென்னை-28
19—4—1975

(ஒ-ம்.) **இரா. நாகசாமி**



புலவர் தாமரைக்கண்ணன்

# நல்வாழ்த்து

செந்தமிழ்க் காத லோடு
தெய்வத்தின் பாலே அன்பும்
சந்தமுற் றமையும் நின்றன்
தகவினைப் போற்று கின்றேன்;
கந்தவேல் அருளால் மேன்மேற்
கல்வியும் பொருளும் பெற்று
முந்துறு புகழும் ஓங்க
நலமெலாம் முயங்கி வாழ்க!

— வாகீச கலாநிதி கி. வா. ஜ.

ஓம் சிவாய நம:

திருச்சிற்றம்பலம்

# அருள்மிகு

# ஆட்சீஸ்வரர் திருக்கோயில்

**திருக்கோயிலும் இருப்பிடமும்:**

உலக உயிரினங்கள் இன்புற்று அமைதியாக வாழ வழி வகுப்பவை, திருக்கோயில்கள்.

வாழ்க்கையின் பல்வேறு சுமைகளில் நெஞ்சம் கசிந்து உருகி, தன்னம்பிக்கை இழக்கும் நேரத்தில் மனிதர்கள் இறைவனைச் சரணடைந்து அமைதி கொள்கின்றனர்; ஆறுதல் பெறுகின்றனர்.

உலக நடவடிக்கைகளிலிருந்தும் வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்தும் விடுபட்டு முழுமையான இன்பத்தைப் பெறவும் உயிர்களிடத்தில் அன்பு காட்டவும் கடவுள் பக்தி உறுதுணையாக இருக்கிறது.

நீராகவும் நெருப்பாகவும் காற்றாகவும் பூமியாகவும் வானவெளியாகவும் காணும் இடங்களில் எல்லாம், நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைப் பாமரரும் படித்தவரும் எளிதில் கண்ணாரக் கண்டு, நாவாரப் பாடி, அவன் புகழைச் செவியாரக் கேட்டு, மெய்யாரச் சிலிர்த்து நெஞ்சைப் பறிகொடுத்துப் பேரின்பம் அடைவதற்கு ஏதுவாக நம்முடைய முன்னோர்கள் கோயில்களை அமைத்துள்ளனர்.

அவ்வாறு சிறப்புற அமைந்த கோயில்களை இறைவன் இன்னருள் பெற்ற பெரு முனிவர்களும் தவஞானியரும் நேரில் வந்து பாடியுள்ளனர். அத்தகைய உயர்ந்த சிறப்பைப் பெற்ற திருக்கோயில்களில் தனிச்சிறப்புப் பெற்றது, ஆட்சீஸ்வரர் திருக்கோயில். தொண்டை நன்னாட்டின் முப்பத்திரண்டு சிவமுக்தி தலங்களில், இதுவும் ஒன்று.

ஆட்சீசுவரர் கோயில், சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தொண்ணூற்று ஆறுவது கிலோ மீட்டரில் (ஐம்பத்தொன்பதாவது கல்லில்) உள்ள அச்சிறுபாக்கம் எனும் ஊரின்கண் இருக்கிறது.

அச்சிறுபாக்கத்திற்கு வர புகைவண்டி வசதியும் பேருந்து வசதிகளும் நிரம்ப உள்ளன. சென்னையிலிருந்து விழுப்புரம் செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது.

இக்கோயில் கல்வெட்டில், 'செயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் தென்பால் தனியூர் அச்சிறுபாக்கம்' என்று அச்சிறுபாக்கத்தைப் பற்றிக் குறிக்கப் பெற்றுள்ளது. தனியூர் என்றால் பெரிய நகரம் என்றும், தனித்து இயங்கும் அளவுக்கு எல்லா வளங்களும் நிரம்பிய தனியான நகரம் என்றும் பொருள் பெறும்.

**தலவரலாறு :**

கன்னித் தமிழகத்தின் கடற்கரையருகில் உள்ள ஊர்கள் 'பாக்கம்' என்ற சொல்லால் குறிக்கப் பெறுவது, பண்டைய மரபு.

கீழைக் கடற்கரையான இடைக்கழி நாட்டுப் பகுதியிலிருந்து சற்று மேற்குப் புறம் தள்ளி அமைந்த தனியான பெரிய ஊர் ஆனதால், இவ்வூர் 'தனியூர் அச்சிறு பாக்கம்' என்று குறிக்கப் பெற்றிருக்கலாம்.

இவ்வூருக்கு அச்சிறுபாக்கம் என்று பெயர் வந்ததற்கு மூன்று செய்திகளை மக்கள் கூறுகின்றனர்.

ஒன்று...

முன்பு ஒரு காலத்தில் தாரகன், வித்மன்மாலி, கமலாட்சன் ஆகிய மூன்று அசுரர்களும் பிரம்மதேவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். அவர்கள் தவத்துக்கு இரங்கிய பிரம்மதேவர் அவர்கள் முன்தோன்றி 'உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் முறையே தங்களுக்குப் பொன் வெள்ளி இரும்பு ஆகியவற்றால் ஆனதும் பறக்கும் வல்லமை பொருந்தியது மான மூன்று கோட்டைகள் வேண்டும் என்று வேண்டினர். அவரும் அவ்வாறே வரமளித்தார்.

அவர்கள் அக்கோட்டைகளுடன் வானத்தில் பறந்து சென்று தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் தாங்க வொண்ணு இடுக்கண் புரிந்து வந்தனர். தேவர்கள் துன்பம் தாளாது சிவபெருமானிடம் முறையிட்டனர்.

சிவபெருமான் சூரிய சந்திரர்களை ஆழிகளாகவும், கீழ் ஏழு உலகங்களைத் தேருக்குக் கீழ் தட்டுகளாகவும், அட்ட திக்கு மலைகளைத் தூண்களாகவும், மேலேழு உலகங்களைத் தேரின் மேல் தட்டுகளாகவும், இமயத்தைக் கொடியாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாவும், பிரம்மாவைச் சாரதி யாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேடனை அந்த வில்லுக்கு நாணுகவும், மகாவிஷ்ணுவை அம்பாகவும், அமைத்துக் கொண்டு தேவாம்சம் பொருந்திய தேரில் அசுரர்கள் தங்கியிருந்த திரிபுரம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

அவர், முழுமுதற் கடவுளாகிய விநாயகரைத் தியானிக்காமல் புறப்பட்டதால், அந்த தெய்வாம்சம் பொருந்திய தேரின் அச்சு வழியில் முரிந்துவிட்டது. அப்படி,

தேரின் அச்சு இற்ற இடமே அச்சிறுபாக்கம் எனப் பெயர் பெற்றது.

இதனை அருணகிரிநாதர் திருப்புகழில்,

**''முப்புறம் எரிசெய்த அச்சிவன், உறைரதம்**
**அச்சது பொடி செய்த அதிதீரா...''**

என்று பாடுகின்றார்.

## இரண்டு...

முன்பு ஒரு சமயம் பாண்டிய மன்னன் ஒருவன் பெரும்படையோடு வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்றான். இவ்வூர் வழியாக அவன் சென்றபோது காட்டு முல்லைக் கொடிகள் சூழ்ந்த கானம் ஒன்றைக் கண்டான். காட்டில் பொன்னிற உடும்பு ஒன்று ஓடுவதைப் பார்த்தான்.

அவன் அதனைத் துரத்திச் செல்கையில் சரக் கொன்றை மரத்தின் அடியிலிருந்த பொந்து ஒன்றில் அது ஓடி மறைந்தது. ஏவலர்களை அழைத்து அம்மரத்தை வெட்டும்படி ஆணையிட்டான், அரசன். ஏவலர்கள் கோடரி யால் அம்மரத்தின் அடிப்பாகத்தை வெட்டக் குருதி வெளிப் பட்டது. மண்ணை அளைந்து பார்க்கையில் ஒப்பிலதாய் முளைத்த சிவலிங்கம் ஒன்றைக் கண்டார்கள். அன்று முழுவதும் சிவனுக்கு ஏற்பட்ட தழும்பை எண்ணி வருந்திய படியே உறக்கத்தில் ஆழ்ந்தான், மன்னன்.

அவன் கனவில் எம்பிரான் தோன்றித் தமக்கு ஒரு கோவில் கட்டும்படி பணித்தார். மன்னனும் அந்த ஆணையை சிரமேற்கொண்டு வேண்டிய தளவாடங்களை யெல்லாம் சேகரித்துத் திரிநேத்திரதாரி என்ற முனிவரிடம் வேறு எங்கும் இல்லாத விதத்தில் கோயில் ஒன்றைக் கட்டும் படிக் கூறிவிட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

பாண்டிய மன்னன் திரும்பி வந்துபார்த்தபோது கோயிலில் இரண்டு கருவறைகள் (மூலஸ்தானங்கள்) இருப்பதைக் கண்டான்.

இராஜ கோபுரத்தினின்று பார்த்தால் ஒரு கருவறை நேராகத் தெரிந்தது. இன்னொன்று சற்று வடக்கே தள்ளி இருந்தது.

பாண்டியன் இதைப் பற்றி முனிவரை வினவினர்.

'இராஜ கோபுரத்திற்கு நேரே வீற்றிருப்பவர் (அரசராகிய) உம்மை ஆட்சிகொண்ட ***உமையாட்சீஸ்வரர்*** ; மூலவரோ எம்மையாண்ட ***ஆட்சீஸ்வரர்***' என்று திரி நேத்திரதாரி பதில் அளித்தார்.

அது முதல் மூலவருக்கு ஆட்சீஸ்வரர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

இவருக்கு ஏற்படுத்திய கல்வெட்டுக்களில் '***முல்லைக் கானமுடையார்***' என்ற பெயர் வழங்குகிறது. சுவாமியின் பின்புறத்தில் ஒரு வெட்டுத் தழும்பு இன்றும் காணப் படுகிறது.

கோயிற் பணி முடிந்த பின்னர் நெடுங்காலம் திரி நேத்திரதாரி கடுந்தவத்தை மேற்கொண்டார்.

தவத்திற்கு மெச்சிய ஆட்சீஸ்வரர் அவர்முன் தோன்றி 'யாது வரம் வேண்டும்?' எனக்கேட்க, முன்னர், திரிபுவனம் எரித்தபோது தேரினின்று இறங்கிய காட்சியைக் காண்பிக்கும்படி திரிநேத்திரதாரி இறைவனிடம் வேண்டினர். அவ்வாறே எம்பிரானும் அவருக்குக் காட்சி அளித்தார்.

அன்று முதல், ஆண்டுக்கு ஒரு முறை பெருந் திருவிழாவான பிரமோற்சவத்தில் ஏழாம்நாள் அந்தி மயங்கும் நேரத்தில் கொன்றை மரத்தடியில் திரிநேத்திரதாரிக்குத்

தேரினின்று இறங்கி இறைவன் காட்சி அளித்து வருகின்றார். அது **'கொன்றையடி சேவை'** என அன்பர்களால் வழங்கப் பெறுகிறது.

**மூன்று...**

பாண்டிய நாட்டு அரசன் ஒருவன் தன் நாட்டிலுள்ள கோயில் ஒன்றின் திருப்பணிக்காகக் கங்கை ஆற்றின் மணல் மூட்டைகளை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு வந்தான். அப்போது அந்த வண்டிகள் இந்த இடத்தின் அருகில் வந்து மேலே செல்லாமல் நின்றுவிட்டன. அவற்றை ஊக்கிச் செலுத்த முயன்றனர். அதனால் வண்டிகளின் அச்சுகள் முறிந்துவிட்டன.

அந்தச் செய்தி, அந்த மன்னனுக்கு வான்ஒலி வழியாகக் கேட்கவே, அவனே நேரில் வந்து இந்தக் கோயிலின் திருப்பணிகளைச் செய்வித்தான்.

அந்த வண்டிகள் வந்து நின்ற இடமே, **வண்டிக் குப்பம்** என்று இன்றும் பெயர் வழங்கப்பெறுகிறது.

இப்படி ஒரு செவி வழிச் செய்தியும் வரலாறாகக் கூறப்படுகிறது.

**திருக்கோயிலின் அமைப்பு:**

அருள்மிகு ஆட்சீசுவரர் கோயிலின் மொத்தப் பரப்பளவு 37,000 சதுர அடி.

திருமதிலின் நீளம் மேல் கீழாக 265 அடி; தெற்கு வடக்காக 140 அடி.

இக்கோயில் இரண்டு திருச்சுற்றுகளை (பிரகாரங்களைக்) கொண்டுள்ளது. வெளிச்சுற்றில் கலியாண மண்டபம்

என்கின்ற அலங்கார மண்டபமும் ஸ்தல விருக்ஷமான சரக் கொன்றை மரமும் அமைந்துள்ளன. அம்மரத்தினடியில் சுவாமி, அம்மன் ஆகியோரை வழிபடும் நிலையில் திரிநேத்திர தாரி முனிவர் (முக்கண் முனிவர்) நந்திதேவரோடு காட்சி யளிக்கின்ருர். இதன் எதிரில் சிம்மதீர்த்தம் என்று அழைக் கப்படும் கிணறு உள்ளது. வெளிச் சுற்று மதிலின்மீது அழகு கொழிக்கும் திருநந்திதேவரின் சிற்பங்கள் காணப் படுகின்றன.

இராஜகோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டது. சிவபெருமானின் திருத்தாண்டவ, திருக்கல்யாண, திரு அவதாரச் சிற்பங்களும் திருமாலின் பல்வகைக் கோலங் களும், தென்திசைக் கடவுள், திசைமுகக் கடவுள் ஆகியோ ரின் திருவுருவச் சிற்பங்களும் கண்ணைக் கவரும் சுவைச் சிற்பங்களாகக் காட்சியளிக்கின்றன. இக்கோபுரம் கைவினைச் சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

சுவாமி, அம்மன், உமையாட்சீசுவரர் ஆகியோ ருக்குத் தனித்தனி விமானங்கள் அமைந்துள்ளன. பலிபீடத் திற்கு நேரெதிரில் இராஜகோபுர அடிச்சுற்றில் இந்தக் கோயிலை முன்னின்று கட்டிய திரிநேத்திரதாரி முனிவரின் சின்னஞ்சிறு திருவுருவம் காணப் பெறுகிறது.

தமிழகத்தில் வேறெங்கும் காணப்படாத வகை யில் இரண்டு கருவறைகளைக் கொண்டதாக இக்கோயில் உள்ளது. இராஜகோபுரத்திற்கு நேராக உமையாட்சீசுவரர் கருவறையும் அதன் வடபுறத்தில் சற்றுத் தள்ளி மூலவரான ஆட்சீசுவரர் கருவறையும் உள்ளன.

கண்ணுவ முனிவரும், கௌதம முனிவரும், உமாபதிச்சிவாச்சாரியாரும் வழிபட்டு அருள்பெற்றத் தலம் இது என்று பலர் கருதுகின்றனர்.

ஓம் சிவாய நம:

அருள்மிகு ஆட்சீஸ்வரர் துணை

# அருள்மிகு ஆட்சீஸ்வரர்

# இறையகம்

உலகம் உவப்ப கம்பீரமாக எழுந்தருளியிருக்கும் இராஜகோபுரத்தின் கீழ் மன ஒருமையுடன் நாம் நுழைந்து சென்றதும் பலிபீடத்தையும் கொடி மரத்தையும் (துவஜ ஸ்தம்பத்தையும்) அவற்றை அடுத்து அதிகார நந்தியையும் தரிசிக்கிறோம்.

திருக்கோயிலின் திருச்சுற்றின் நுழைவாயிலைக் கடந்து உட்சென்றால்...

இராஜகோபுரத்தின் நுழைவாயிலுக்குச் சற்று வடப்புறம் தள்ளியிருக்கும் ஆட்சீசுவரர் கோயில் முகப்பின் வாயிற்படியில் இருபுறமும் ஆறரை அடி உயரம் உள்ள துவார பாலர்களாகிய தாரகன், வித்வன்மாலி இருவரையும் சந்திக்கிறோம், மூக்கு சிதைக்கப்பட்டு அழகு இழந்த அவர்கள் முகங்கள் நம் இதயத்தில் வேதனை வடுக்களை உண்டாக்குகின்றன; இந்து சமுதாயத்தின் ஒற்றுமை யின்மையையும் அலட்சியப் போக்கினையும் அவை நமக்கு உணர்த்துகின்றன.

வாயிலின் தென்புறம் அருள்மிகு விநாயகர், கோயிலுக்கு வரும் அடியவர்களை அருட்கரத்துடன் வரவேற்கிறார்.

விநாயகருக்குப் பின்புறம் சுவர் சிற்பம் ஒன்று சிறியதாக செதுக்கப்பட்டு இருக்கிறது. அதில் யானை ஒன்று

சிவலிங்கத்திற்கு நீரால் அபிடேகம் செய்கிறது. ஐந்து பேர் நின்ற நிலையிலும் ஒருவர் அமர்ந்த நிலையிலும் சிவலிங்கத்தை வழிபடுகின்றனர். அதற்கு அருகில் தென்பக்கம் காராம் பசு ஒன்று சிவலிங்கத்திற்குத் தன் மடியிலிருந்து பாலைப் பொழிந்து அபிடேகம் செய்கிறது.

விநாயகருக்கு அருகில், நாகப்பிரதிஷ்டை ஒன்று இருக்கிறது. சங்கிலியாகப் பிணைந்து நிற்கும் இருநாகங்களுக்கு இடையில் சிவலிங்கம் அமைந்துள்ளது.

உள்பிரகாரத்துத் தென்புறச் சுவரின் அருகில் உள்ள திருமாளிகைப் பத்தியில் மேற்கு திசை பார்த்து சொல்லின் செல்வராகிய அருள்மிகு ஆஞ்சநேயர் இருகை கூப்பி நிற்கும் அழகிய கற்சிலை ஒன்று இருக்கிறது.

அடுத்து, சுவர் ஓரத்தில் முதலில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் திருவுருவச் சிலைகளும்...

அவற்றை அடுத்து, சித்தி, புத்தி இருவரும் இரண்டு பக்கமும் அமர்ந்திருக்க பொல்லாப் பிள்ளையாரும்...

அதனையடுத்து, பரவை நாச்சியாரும் சங்கிலி நாச்சியாரும் இரண்டு பக்கமும் அணிசெய்ய சுந்தரமூர்த்தி சுவாமிகளும்...

அதன் பின்னர், வரிசையாக அறுபத்து மூன்று நாயன்மாரும்...

அவர்களை அடுத்து, ஒன்பது தொகை அடியார் களும்...

சேக்கிழாரும் திருக்கோலங் கொண்டுள்ளனர்.

திரு மாளிகைப் பத்தியில் உள்ள இவை அனைத்தும் அழகிய கல் திருமேனிகளே!

சுற்றுச்சுவரின் மேற்குப் புறத்தில் அலர்மேலு மங்கைத் தாயாரும், ஸ்ரீநிவாசப் பெருமாளும் கிழக்குத் திசை நோக்கிக் காட்சி தருகின்றனர்.

அவர்களை அடுத்து, உட்கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலில் உமையாட்சி ஈசுவரர் எழுந்தருளி யுள்ளார். இந்தக் கோயில் வாசலின் வலப்பக்கம் விநாயகர் நம்மை வரவேற்கிறார்.

உமையாட்சி ஈசுவரர் கோயிலின் உள்ளே, தென் புறத்தில் இருபுறமும் இரண்டு யானைகள் இருக்க ஸ்ரீ சரஸ்வதி தேவியும் ஸ்ரீ லட்சுமி தேவியும் காட்சி தருகின்றனர்.

அவர்களை யடுத்து சப்த மாதர்களும், அருள்மிகு ஐயப்ப சுவாமியும் உள்ளனர்.

சபரிமலை ஐயப்பன் கால்களை மடக்கி யோக பட்டை தரித்து, இடக்கையினை முழங்கால்மீது படியநீட்டி வலக்கையில் சின்முத்திரை தாங்கி நமக்கு அருள் புரிகிறார். இவரோ, இடக்காலை மடக்கி வலக்காலைக் கீழே தொங்கவிட்டு, இடக்கையை யோக பட்டை தரித்த கால்மீது படரவிட்டு வலக்கையில் ஞானங் குறிக்கும் செண்டுடன் காட்சி தருகிறார்.

இந்தத் திருக்கோலமுடைய ஐயப்பன் (ஞான சாஸ்தா) காஞ்சிபுரம், திருவனந்தபுரம், தென்னார்க்காடு மாவட்டத்தில் பேரணியை அடுத்த செம்மநேரி என்று அழைக்கப்பெறும் திருநந்திபுரம் ஆகிய தலங்களில் அபூர்வ மாக உள்ளன.

கோயிலின் உள்ளே கருவறையில் உமையாட்சீசு வரரும், அர்த்த மண்டபத்தில் தென்முகம் நோக்கி உமை யாட்சி ஈசுவரியும் அருள்புரிகின்றனர்.

மகா மண்டபத்தில் அழகிய நந்தி சிலை ஒன்று மன ஒருமையுடன் கண்களைமூடி தியானம் செய்வதுபோல் இறைவனை வழிபடும் நிலையில் அமர்ந்துள்ளது.

மீண்டும் வெளியே வந்து ஆட்சீசுவரர் கோயில் உட்பிரகாரத்தை அடைந்தால் ஸ்ரீ பழனி ஆண்டவர், வள்ளி தெய்வயானை புடைசூழ மயிலேறிக் காட்சி தரும் ஸ்ரீ ஆறுமுக சுவாமி இருவரையும் தரிசிக்கிறோம்.

அடுத்து மேற்குப்புறம் செல்லும் ஒரு வாசற்படி இருக்கிறது. உள்ளே செல்கிறோம். உள்ளே சுவாமிக்கு அபிஷேகம் செய்யும் நன்னீர் எடுக்கும் கிணறு ஒன்றும் சிறு தோட்டமும் உள்ளன.

இந்தத் தோட்டத்தில் சோழர் காலத்தில் அற்புத மான வேலைப்பாட்டுடன் வடிக்கப்பெற்ற நான்கு கரங்கள் கொண்ட இளங்கிளியம்மை சிலை ஒன்று இடக்கை சிதைந்த நிலையில் வெயிலில் காய்ந்து மழையிலும் பனியிலும் நனைந்து கேட்பாரற்ற நிலையில் இருக்கிறது. வழவழப்பான அதன் கன்னங்கள், அழகிய மூக்கு, கண்கள், காதுக்குழை துவாரங் கள், அழகான ஆலிலை வயிறு, அது அணிந்திருக்கும் அணி மணிகள், நின்றிருக்கும் நளினமான அழகு, அழகு ஒழுகும் புன்முறுவல் முதலியவற்றை கலை நுட்ப அறிஞர்கள் கண்டால், அந்த இடத்தைவிட்டு வரவே மனம் வராது. அவ்வளவு அழகிய சிற்பம், அது!

கால மாறுபாட்டினால் இந்துக் கோயில்களின் அழகான சிற்பங்களுக்கு உண்டான இழப்புகளை எண்ணி வருந்தியவாறு வெளியில் வந்து, பழையபடி ஆட்சீசுவரர் கோயிலின் வடக்குச் சுற்றினை அடைகிறோம்.

பிரகாரத்தின் வடப்புறம் உள்ள திருமாளிகைப் பத்தியில் அரிய அற்புதமான வேலைப்பாடுகள் அமைந்த அறுபத்து மூன்று நாயன்மார்களும், ஒன்பது தொகை அடியார்களும் உள்ளனர். இந்தத் திருமேனிகள் பஞ்ச லோகத்தால் வடிக்கப் பெற்றவை.

கோயிலின் சித்திரை மாதப் பெருவிழாவில் எட்டாம் நாள் அன்று இந்த அடியார்கள் 72 பேருடன் சேக்கிழார் சுவாமிகளும் சேர்ந்து ஊரில் உலா வருவர்.

அடுத்து...

ஆனந்தத் தாண்டவமாடும் நடராசர்...சிவகாம சுந்தரி...மாணிக்கவாசகர்...காரைக்கால் அம்மையார் சூழ இன்னருள் புரிகிறுர்.

நடராசருக்குக் கிழக்கேயுள்ள தனியிடத்தில் சந்திரசேகரர் அம்மையுடன் காட்சியளிக்கின்றுர்.

கிழக்குச் சுவரின் பக்கம் (பின்புறம் நாய் உருவத்துடன்) கால பைரவர், சூரியமூர்த்தி இருவரும் மேற்கு நோக்கி நின்று ஆட்சீசுவரரைத் தரிசிக்கின்றனர். கால பைரவர், இவ்வாறு பிரம்மகபாலமாகிய மண்டையோடுகளைக் கோத்த மாலையோடு எழுந்தருளியிருப்பது வேறெங்கும் காண முடியாத ஒன்று. இவரே இக்கோயிலின் இரவுக் காவலர் என்பர்.

ஆட்சீசுவரர் கோயில் முகப்பின், வடக்குப் பக்கம் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் காட்சி தருகிறுர்.

அவருக்குப் பின் பக்கம் உள்ள சுவர் சிற்பத்தில் சண்டிகேசுவரர் வரலாறு அற்புதமாகச் செதுக்கப் பெற்றுள்ளது. தகப்பனை மகன் கோடரியால் வெட்ட முயல, இலிங்கம் இரண்டு கைகளை நீட்டித் தடுக்கிறது.

இதுவரை இனிய கடவுட் காட்சிகளால் இதயத் தூய்மை பெற்ற நாம், பக்திப் பரவச நிலையில் கோயில் உள்ளே நுழைகிறேம்.

கோயில் கருவறையில் அருள்மிகு ஆட்சீசுவரர் உலகின் எல்லா சக்திகளையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டு அமைதியே உருவாக எழுந்தருளியுள்ளார். இறைவன் திருமுடியில் இலேசான வெட்டுக்காயம் தெரிகிறது.

இறைவன் சுயம்பு உருவானவர். இவர் பாக்க புரேசர், ஆட்சீசர், ஆட்சி கொண்டார், ஸ்திரவாசபுரீஸ்வரர், முல்லைக் கானமுடையார் என்னும் திருப்பெயர்களைக் கொண்டவர் என்பதைக் கல்வெட்டுக் குறிப்புகளாலும் ஏனைய குறிப்புகளாலும் அறிகிறோம்.

இறைவன் இருக்கும் இடத்தைப் பாண்டியன் நிறுவினன் என்பர். சிறிய அந்தக் கருவறை மண்டபத்தின் நடுவில் கிணறு ஒன்று உள்ளது. கிணற்றின் மேல் வடக்குத் தெற்கில் குறுக்காகப் பாவப் பெற்றுள்ள ஆறு கற்களின் மீது நடந்தே கருவறைக்குச் சென்று அருள்மிகு ஆட்சீசுவரருக்குக் குருக்கள் பூசை செய்கிறார்.

இறைவனை தரிசித்தபின், ஆழ்ந்த அமைதி கொண்ட இதயத்துடன் வெளியில் வருகிறோம்.

மீண்டும் ஒருமுறை உட்சுற்றில் ஒரு முறை சுற்றி வருவோமேயானால், சில இன்றியமையாத செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.

கோயிலின் தென்புறச் சுவரில் ஒரு திட்டிவாசல் இருந்ததாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

அது அடைக்கப்பட்டு அந்த இடத்தில் சிறு விமானம் அமைந்த சிறு கோயிலில் அம்மன் இளமுருகன் சேர சோமாஸ்கந்தர் சிலை ஒன்று திருஞான சம்பந்தர் பாடலைக் கேட்பதுபோல சுவர் சிற்பமாகச் செதுக்கப் பட்டுள்ளது.

சுவரில் சிறு விநாயகரும், தலைகீழாகத்தவம் செய்யும் முனிவர் ஒருவரும், சிவபெருமானுக்குக் கண்ணை அப்பிக் கண்ணப்பர் என்று பெயர்பெற்ற திண்ணப்பரும் அருகில், ஐந்து சதுர அங்குலத்தில் ஆறு கால்களும் இரண்டு உடல்களும் ஒரு தலையும் கொண்டு எதிர் எதிரேயுள்ள இரண்டு மான்களும் உள்ளன.

ஒரு மானின் உடலை மறைத்துப் பார்த்தால் கழுத்தைத் திருப்பி மருண்டு பின்புறம் ஒரு மான் பார்ப்பது போலவும், இன்னொரு மானின் உடலை மறைத்துப் பார்க்கும் போது நேராக நிமிர்ந்து தனக்கு முன்னால் பறந்து போகும் ஒரு பறவையைக் கம்பீரமாகப் பார்ப்பதுபோல் ஒரு மானும் தெரிகின்றன.

இதற்கு மேலே யாளியும் யானையும் ஒரே உடலுடன் இருப்பதைப் போல் சிறிய உருவம் செதுக்கப் பெற்றுள்ளது.

அதை அடுத்து, அழகிய விநாயகர் நின்ற நிலையில் உள்ளார்; அவர் அருகில் சிறு கோயிலில் தட்சணாமூர்த்தி சுவாமிகள் அமர்ந்திருக்கிறார். சுவாமிகளின் கீழே திருநந்தி இருப்பது கவனிக்கத் தக்கது.

ஸ்ரீ தட்சணாமூர்த்தி சுவாமிகளுக்கு எதிரே, கிழக்கு நோக்கியவண்ணம் உற்சவமூர்த்தியாம் ஆட்சிலிங்க சோமாஸ்கந்தர் இளங்கிளியம்மையுடன் எழுந்தருளியுள்ளார்.

பின்...

கருவறைக்கு நேர் பின்புறம் ஸ்ரீ மகாவிஷ்ணு மேற்றிசை பார்த்து கோயிலை வலம் வரும் பக்தர்களுக்கு அருள் புரிகிறார்.

வடபுறம் ஸ்ரீ பிரம்மாவும் ஸ்ரீ துர்க்காம்பிகையும் அருள் புரிகின்றனர்.

இவர்கள் இடையே அவர்களைப் பார்த்தவாறு ஸ்ரீ சண்டிகேசுவரர் காட்சி தருகிறார்.

உட்கோயில் சுவரின் வெளிப்புறம் முழுவதும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இந்தக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ள கற்கள் பல இடங்களில் மாறுபட்டு இருப்பதால், இந்தக் கோயிலைப் பிரித்துப் பழுது பார்த்து மீண்டும் நிறுவியபோது, கல்வெட்டுள்ள கற்கள் மாறி விட்டிருக்கலாமோ என்ற ஐயம் எழுகிறது.

கோயிலின் தென்புறத்தில் அறுபத்து மூவர் திருமேனிகள் உள்ள திருமாளிகைப் பத்தியில், மேற்புறம் சுமார் மூன்று அடி அகலமும், கீழ்ப்புறம் சுமார் இரண்டரை அடி அகலமும் சுமார் ஏழரை அடி நீளமும் உள்ள கல்வெட்டு ஒன்று தரையில் பதிக்கப் பெற்றுள்ளது.

இது தவிர கருவறைக்கு வெளியில் தரையில் ஆங்காங்கே துண்டுதுண்டாகக் கல்வெட்டுக் கற்கள் பதிக்கப் பட்டுள்ளன. அவை பிற்காலத்தவை என்பதை எழுத்துக் களின் வாயிலாக அறிகிறோம்.

இஃது அன்றியும், கோயிலின் எதிரில் உள்ள பெரிய ஏரியின் கலங்கலின் உள்புறமும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இன்னும் இதைப் போன்ற கல்வெட்டு கள் கலங்கலின் உள்ளே எத்தனை கட்டப் பட்டுள்ளனவோ தெரியவில்லை. மற்றும் பெரிய கல்நந்தி உடைபெற்று ஏரியில் கரை கல்லாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

அந்தக் கலங்கல் கட்டிய காலத்தில், கோயில் பழுதுபட்டு இருந்திருக்கலாம். எனவே, கோயிலின் கற்களைப் பயன்படுத்தியபோது இப்படி நேர்ந்திருக்கலாம் என்று எண்ணுவதற்கு இடமுண்டு.

ஓம் சக்தி:

அருள்மிகு இளங்கிளியம்மன் துணை

# அருள்மிகு இளங்கிளி அம்மன் இறையகம்

அருள்மிகுந்த ஆட்சீசுவரர் சுவாமிகளுடன் இன்னருள் புரியும் இளங்கிளி அம்மனும் இந்தத் திருக்கோயிலில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்புரிகின்றாள்.

கோபுர நுழைவாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும் வடபுறத்தில் அருள்மிகு இளங்கிளி அம்மன் திருக்கோயில் தென்புறம் பார்த்தவண்ணம் அமைந்துள்ளது.

அம்மன் கோயிலின் கருவறை நுழைவாயிலின் இருமருங்கும் அருள்மிகு விநாயகப் பெருமானும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகளும் நம்மை வரவேற்கின்றனர்.

உள்ளே கருணைமழைக் கண்களுடனும் அருள் பொழியும் திரு முகத்துடனும் அகிலாண்ட நாயகியாகிய இளங்கிளி அம்மை காட்சி தருகின்றாள்.

அம்பிகைக்கு சுந்தரநாயகி, பாலசுகாம்பிகை, இளங்கிளி மொழியம்மை, அதிசுந்தர மின்னாளம்மை என்னும் திருப்பெயர்களும் உண்டு.

அம்மனின் நின்ற திருக்கோலத்தைக் காண கண் கோடி வேண்டும்; கண்டு மகிழ மனம் ஆயிரம் வேண்டும்! மூவா இளம் சிரிப்பும், முருகின் இளவடிவும் ஒருங்கு இணைய கண்களால் நம்மை வரவேற்று உலகை உய்விக்கும் கரங்களால் நம்மை வாழ்த்துகிறாள், அம்பாள்!

அம்மன் சந்நிதிக்கு மேலண்டை சுவாமியின் பள்ளியறை பாங்குடன் காட்சி தருகிறது.

காலையில் பூசை துவங்கும்போது, முதலில் இந்தப் பள்ளியறைக்குக் குருக்கள் வந்தவுடன், சுவாமி அம்மன் இருவருக்கும் சந்தன புஷ்பம் சாத்தி பால் நைவேத்தியம் செய்து, சுவாமியை சுவாமி சந்நிதானத்திற்கு எடுத்துச் சென்ற பிறகே, காலை சந்தி பூசை, உச்சி கால பூசை, மாலை பூசை முதலியவை முறையே நடைபெறுகின்றன. இரவு அர்த்த சாம பூசையின்போது மூல ஸ்தானத்தில் சுவாமிக்கு அபிடேக பூசை, நைவேத்தியம், தீபாராதனைகள் முதலிய முடிந்த பின்னர், காலையில் பள்ளியறையிலிருந்து எடுத்துச் சென்ற பள்ளியறை சுவாமியைப் பல்லக்கில் இட்டு கோயில் உள் பிரகாரத்தைச் சுற்றி வந்து அம்மன் கோயிலை அடுத்து இருக்கும் பள்ளியறையில் உள்ள அம்மன் அருகில் சுவாமியை எழுந்தருளச் செய்து பால், வெற்றிலைப் பாக்கு உட்பட அன்ன நைவேத்தியத்துடன் தீப ஆராதனைகள் செய்து, திரையை மூடி திருக்காப்பிடப் பெறுகிறது.

அருள்மிகு இளங்கிளி அம்மன் கோயிலின் முன் மண்டபத்தின் கீழ்ச் சுவரில் திருஞான சம்பந்த சுவாமிகளால் பாடப்பெற்ற திரு அச்சிறுபாக்கம் தேவாரப் பதிகம் பதினொன்றும், திருத்தலக் கோவைப் பாடல் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த திருத்தலக் கோவை திருத்தாண்டகம் ஒன்றும் பக்தி மனம் கொண்ட பெருநிலக் கிழார்களால் சலவைக் கல்லில் அழகுறப் பொறிக்கப் பெற்றுள்ளன.

இக் கருவறையினோடு அமைந்துள்ள மண்டபத்தின் மேற்புரம் யாகசாலையும் அதன் தென்னண்டை நவ நாயகர்களாகிய நவக்கிரக இறையகமும் உள்ளன.

—)◡(—

சிவமயம்

# சமய குரவர் பாடல்கள்

## திருஞான சம்பந்தர் வருகை:

திருஞான சம்பந்தர் திருக்கழுக்குன்றத்தினின்று பதினாறாயிரம் அடியார்களுடன் இத்தலத்திற்கு வருகை தந்து திருப்பதிகம் பாடியுள்ளார். இங்கேயே சில நாட்கள் தங்கியும் இருந்துள்ளார். இச் செய்தி பெரிய புராணத்தில் கூறப் பட்டுள்ளது :

### சேக்கிழார் அருளிய பெரிய புராணம்

### [சம்பந்தர் புராணம்]

*இன்புற்றங் கமர்ந்தருளி ஈறில் பெருந் தொண்டருடன்*
*மின்பெற்ற வேணியினார் அருள்பெற்றுப் போந்தருளி*
*என்புற்ற மணிமார்பர் எல்லையிலா ஆட்சிபுரிந்து*
*அன்புற்று மகிழ்ந்த திரு அச்சிறுபாக்கத் தணைந்தார்.*
(1132)

*ஆதிமுதல் வரைவணங்கி ஆட்சிகொண்டா ரெனமொழியும்*
*கோதில் திருப்பதிகவிசை குலாவியபா டலிற் போற்றி*
*மாதவத்து முனிவருடன் வணங்கிமகிழ்ந் தின்புற்றுத்*
*தீதகற்றுஞ் செய்கையினார் சிலநாளங் கமர்ந்தருளி...*
(1133)

திருஞான சம்பந்தர் இந்தக் கோயிலைப் பற்றிச் சிறப்புறப் பாடிய தேவாரப் பாடல்கள் தெள்ளு தமிழின் தீஞ்சுவை கனிந்தவை.

சிவமயம்

திருஞான சம்பந்தர் அருளிய

# அச்சிறுபாக்கம் - தேவாரம்

பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பொன்றிரண் டன்ன புரிசடை புரளப்
    பொருகடற் பவளமோ டழனிறம் புரையக்
குன்றிரண் டன்ன தோளுடை யகலங்
    குலாயவெண் ணூலொடு கொழும்பொடி யணிவர்
மின்றிரண் டன்ன நுண்ணிடை யரிவை
    மெல்லிய லாளையோர் பாகமாப் பேணி
அன்றிரண் டுருவ மாயவெம் மடிகள்
    அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 1

தேனினும் இனியர் பாலன நீற்றர்
    தீங்கரும் பனையர்தம் திருவடி தொழுவார்
ஊனயந் துருக உவகைகள் தருவார்
    உச்சிமே லுறைபவர் ஒன்றலா தூரார்
வானக மிறந்து வையகம் வணங்க
    வயங்கொள நிற்பதோர் வடிவினை யுடையார்
ஆனையின் உரிவை போர்த்தவெம் மடிகள்
    அச்சிறு பாக்கம தாட்சி கொண் டாரே. 2

காரிருள் உருவ மால்வரை புரையக்
    களிற்றின துருவுகொண் டரிவைமே லோடி
நீருரு மகளை நிமிர்சடைத் தாங்கி
    நீறணிந் தேறுகந் தேறிய நிமலர்
பேரரு ளாளர் பிறவியிற் சேரார்
    பிணியிலர் கேடிலர் பேய்க்கணஞ் சூழ
ஆரிருண் மாலை ஆடுமெம் மடிகள்
    அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 3

மைம்மலர்க் கோதை மார்பினர் எனவும்
மலைமகள் அவளொடு மருவின ரெனவும்
செம்மலர்ப் பிணையுஞ் சிறையணி புனலும்
சென்னிமே லுடையரெஞ் சென்னிமே லுறைவார்
தம்மல ரடியென் றடியவர் பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலும் தாணிழற் சேர
அம்மலர்க் கொன்றை அணிந்தவெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 4

விண்ணுலா மதியஞ் சூடின ரெனவும்
விரிசடை யுள்ளது வெள்ளநீ ரெனவும்
பண்ணுலாம் மறைகள் பாடின ரெனவும்
பலபுக ழல்லது பழியில ரெனவும்
அண்ணலா காத இமையவர் நாளும்
ஏத்தர வங்களோ டெழில்பெற நின்ற
அண்ணலான் ஊர்தி ஏறுமெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 5

நீடிருஞ் சடைமேல் இளம்பிறை துளங்க
நிழல்திகழ் மழுவொடு நீறுமெய் பூசித்
தோடொரு காதினில் பெய்துவெய் தாய
சுடலையில் ஆடுவர் தோலுடை யாகக்
காடரங் காகக் கங்குலும் பகலும்
கழுதொடு பாரிடங் கைதொழு தேத்த
ஆடரவாட ஆடுமெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 6

ஏறுமொன் றேறி நீறுமெய் பூசி
இளங்கிளை அரிவையொ டொருங்குட னுகிக்
கூறுமொன் றருளிக் கொன்றையந் தாரும்
குளிரிள மதியமும் கூவிள மலரும்
நாறுமல் லிகையும் எருக்கொடு முருக்கும்
மகிழிள வன்னியும் இவைநலம் பகர
ஆறுமோர் சடைமேல் அணிந்தவெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 7

கச்சுமொள் வாளுங் கட்டிய உடையர்
கதிர்முடி சுடர்விடக் கவரியுங் குடையும்
பிச்சமும் பிறவும் பெண்ணணங் காய
பிறைநுத லவர்தமைப் பெரியவர் பேணப்
பச்சமும் வலியும் கருதிய அரக்கன்
பருவரை எடுத்ததிண் டோள்களை யடர்வித்(து)
அச்சமும் அருளும் கொடுத்தவெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 8

நோற்றலா ரேனும் வேட்டலா ரேனும்
நுகர்புகர் சாந்தமொ டேந்திய மாலைக்
கூற்றலா ரேனும் இன்னவா றென்றும்
எய்தலா காததோ ரியல்பினை யுடையார்
தோற்றலார் மாலும் நான்முக முடைய
தோன்றலும் அடியொடு முடியுறத் தங்கள்
ஆற்றலாற் காணு ராயவெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 9

வாது செய் சமணும் சாக்கியப் பேய்கள்
நல்வினை நீக்கிய வல்வினை யாளர்
ஓதியுங் கேட்டும் உணர்வினை இலாதார்
உள்கலா ததோ ரியல்பினை யுடையார்
வேதமும் வேத நெறிகளு மாகி
விமலவே டத்தொடு கமலமா மதிபோல்
ஆதியும் ஈனும் ஆயவெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே. 10

மைச்செறி குவளை தவளைவாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையிற் புதுமலர் கிழியப்
பச்சிற வெறிவயல் வெறிகமழ் காழிப்
பதியவர் அதிபதி கவுணியர் பெருமான்
கைச்சிறு மறியவன் கழலலாற் பேணுக்
கருத்துடை ஞானசம்பந்தன் தமிழ்கொண்(டு)
அச்சிறு பாக்கத் தடிகளை ஏத்தும்
அன்புடை அடியவர் அருவினை இலரே. 11

## சம்பந்தர் - திருத்தலக் கோவை

ஆரூர் தில்லையம்பலம் வல்லம் நல்லம்
வடகச்சியும் அச்சிறுபாக்கம் நல்ல
கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்
நீரூர் வயல் நின்றியூர் குன்றியூரும்
குருகா வையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர் நன்னீள் வயல் நெய்த்தானமும்
பிதற்றாய் பிறைசூடிதன் பேரிடமே.

## திருநாவுக்கரசர் - திருத்தலக்கோவைத் திருத்தாண்டகம்

*எல்சில் இளமர் ஏம நல்லூர்*
*இலம்பையங் கோட்டு ரிறையான் சேரி*
*அச்சிறுபாக்கம் அளப்பூர் அம்பர்*
*ஆவடுதண் டுறை அழுந்தூர் ஆறை*
*கச்சினம் கற்குடி கச்சூ ராலக்*
*கோயில் கரவீரம் காட்டுப்பள்ளி*
*கச்சிப் பலதளியும் ஏகம்பத்தும்*
*கயிலாய நாதனையே காணலாமே.*

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் திருவுந்தியார்

*தச்சுவிடுதலும் தாமடி யிட்டலும்*
*அச்சுமுறிந்த தென் றுந்தீ பற*
*அழிந்தன முப்புரமுந் தீபற.*

## சிவதலச் சிவநாமக் கலிவெண்பா

*................................பொய்யிலா*
*அச்சிறு பாக்கத் ததிசுந் தர மின்னுள்*
*இச்சையுறும் பாக்கபு ரேசனே.*

— உமாபதி சிவாசாரியார்.

## திருவருட்பா - விண்ணப்பக் கலிவெண்பா

*அம்மதுரத் தேன்பொழியும் அச்சிறு பாக்கத்துலகர்*
*தம்மத நீக்குஞ் ஞான சம்மதமே.* (268)

---

குறிப்பு :- 1969-ல் (சௌமிய வருடம், சித்திரை மாதம் 17-ம் நாள்) அச்சிறுபாக்கம் தேவாரப் பாடல்கள் 9-ம் நாள் விழாக்குழுவினர் சார்பாக 16 பக்கங்களில், புலவர் **திருச்சிற்றம்பலனார்** அவர்கள் பொழிப்புரையுடன் ஷ விழாக்குழு வினர்களுள் ஒருவராகிய **திரு. போ. சரவண நாயக்கர்** அவர்களால் வெளியிடப்பெற்றது.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருக்கோயில் திருப்பணிகள்

**திருமதில் புதுப்பித்தல்:**

அருள்மிகு ஆட்சீசுவர ஆலய ஆதீன பரம்பரை வம்சத்தாராகிய ஷ கிராமத்தின் மிராசுதாரரும் செங்குந்த வம்சத்தைச் சேர்ந்த அழகப்ப முதலியார் குமாரரும் பிறவி ஞானியாக விளங்கிய ஷ தேவாலய தர்மகர்த்தர் திருமிகு ஆட்சி அடிமை பழனிசாமி அவர்கள் திருக்கோயில் திருமதில், சுவாமி சந்நிதானம், அம்மன் சந்நிதானம், துவஜஸ்தம்பம், ஸ்தூபிகள், வாகன கிடங்கு முதலியன வற்றைப் பழுது பார்த்துப் புதுப்பித்தார்கள். (இதனை ஷ ஆலய கோபுரவாயில் நிலைப்படியின் தெற்கிலுள்ள கல்வெட்டு மூலம் அறிகிறோம்).

**கோபுரத் திருப்பணி:**

கயப்பாக்கம் திருமிகு. முத்துவேங்கடபதி ரெட்டி யார் அவர்களால் 1909இல் புதிதாக இராஜகோபுரத்தை சுத வேலைகள் செய்து சௌம்ய வருடம், ஆவணி மாதம் 18-ஆம் நாள் குடமுழுக்குப் பெருவிழா நடைபெற்றது.

**திருக்கலியாண மண்டபம்:**

ஸ்ரீ ஆட்சிநாதர், திருவிழா நேரத்தில் ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் அமைக்கப் பெற்றுள்ள கல்யாண மண்டபத்தில் எழுந்தருளி அன்பர்கட்கு அருள்புரிகின்றார். கோயில் பிரமோற்சவம் ஐந்தாம் நாள் உபயம் நடத்தி வரும் தொழுப்பேடு திரு. முத்துசாமி ரெட்டியார் அவர்களும், தொழுப்பேடு திருமதி குப்பம்மாள் அவர்களும் அன்னாரைச் சார்ந்தோரும் இக்கல்யாண மண்டபத்தைக் கட்டியுள்ளனர்.

### அறுபத்து மூவர் :

அச்சிறுபாக்கம் திரு. தனபால் செட்டியார் அவர்கள் பல அன்பர்களின் முயற்சியால் பல ஆண்டுகட்கு முன்னர், அறுபத்து மூவர் கற்சிலைகளும், உலாவரும் வெண்கலச் சிலைகளும் அமைத்து உள்ளார்கள். ஆண்டுதோறும் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் விழாக்களை அன்பர்களின் உதவியுடன் முன்னின்று நடத்திவருகிறார்கள்.

### ஆயிரம் விளக்கு மண்டபம் :

கோயிலின் எதிரில் சென்னை S. M. கணபதிசாமி அவர்களின் மரபினரால் ஆயிரம் விளக்கு மண்டபம் அமைக்கப்பெற்றுள்ளது. அம்மண்டபத்தில் சென்னை சென்சுரி மாவுமில் அதிபர் திரு. மருதப்பிள்ளை அவர்களால் சித்தி விநாயகர் உருவம் அமைக்கப்பெற்றுக் குடமுழுக்கும் நடந்துள்ளது.

### நாகபாசக் கவசம் :

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு மூலஸ்தானத்தில் உள்ள ஆட்சீசுவரருக்கு, திரு பொன்னப்ப கவுண்டர், திரு அண்ணாமலை தேசிகர் இருவரும் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு பல அன்பர்களின் உறுதுணையுடன் அழகு கொழிக்கும் நாக பாசக் கவசம் செய்து அணிவித்துள்ளனர்.

### திருத்தேர்கள் :

கோயிலிலுள்ள பெரிய தேராகிய சுவாமி தேரும், சிறிய தேராகிய அம்மன் தேரும் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பெரிய கயப்பாக்கம் ஜமீன்தார் திருமிகு. முத்துவேங்கடபதி ரெட்டியார் அவர்களும், அச்சிறுபாக்கம் டாக்டர் திருமிகு B. K. ஷெனாய் அவர்களும், தொழுப்பேடு திருமதி குப்பம்மாள் அவர்களும் முன்னின்று நன்கொடை செய்து உருவாக்கி வைத்துள்ளார்கள்.

### வெள்ளிக் கவசம்:

கயப்பாக்கம் திருமிகு முத்துலிங்கா ரெட்டியார், இந்தளூர் திருமிகு வீரா ரெட்டியார், இந்தளூர் திருமிகு முத்து கிருஷ்ண ரெட்டியார், அச்சிறுபாக்கம் டாக்டர் திருமிகு B. K. ஷெனாய் ஆகியோர் முன்னின்று பெருமளவில் அவர்களே முதலீடு செய்து, மீதிக்கு நன்கொடை திரட்டி, இளங்கிளி அம்மன் முழு உருவத்திற்கும், அடிப்பீடத்திற்கும் வெள்ளிக் கவசம் செய்து வைத்துள்ளார்கள்.

### தாமிரக் கவசம்:

உமையாட்சீசுவரர் கோயிலுக்கு வெளிப்புறம் உள்ள ஸ்ரீவெங்கடேசப் பெருமாள், அலர்மேலு மங்கைத் தாயார் இருவருக்கும் திருக்கரங்கள், திருவடிகள், திருமுடிகள் முதலியவற்றிற்கு வெள்ளிமுலாம் பூசப்பட்ட தாமிர கவசங்களை தொழுப்பேடு திருவாளர்கள் வெங்கடபெருமாள் ரெட்டியார் அவர்களும், கோதண்டராம ரெட்டியார் அவர்களும் செய்து அணிவித்துள்ளார்கள்.

### சர, விளக்குகள்:

ஆட்சீசுவரர் கருவறையில் உள்ள சரவிளக்குகளையும், இளங்கிளி அம்மன் கோயிலில் உள்ள சரவிளக்குகளையும் அச்சிறுபாக்கம் டாக்டர் திருமிகு B. K. ஷெனாய் அவர்கள் நன்கொடையாக அளித்துள்ளார்கள்.

### தேவாரப் பாடல்கள் சலவைக்கல்லில் பொறித்தல்:

அருள்மிகு இளங்கிளி அம்மன் கோயிலின் முன் மண்டபத்தின் கீழ்ச் சுவரில் திருஞான சம்பந்த சுவாமிகளால் பாடப் பெற்ற திரு அச்சிறுபாக்கம் தேவாரப் பதிகம்

பதினொன்றும், திருத்தலக் கோவைப் பாடல் ஒன்றும், திரு நாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த திருத்தலக் கோவை திருத்தாண்டகம் ஒன்றும் பக்தி மனம் கொண்ட பெருநிலக் கிழார்கள் இந்தலூர் திரு. S. வீரா ரெட்டியார், இந்தலூர் திரு. R. சீதாராம ரெட்டியார், இந்தலூர் திரு. V. முத்து வரதா ரெட்டியார், புத்தூர் திரு. ரங்கசாமி ரெட்டியார், தொழுப் பேடு திரு. தூரி. இராமகிருஷ்ண ரெட்டியார், திருமுக்காடு தூ. இராமசாமி ரெட்டியார் ஆகியோர்களால் சலவைக் கல்லில் அழகுறப் பொறிக்கப் பெற்றுள்ளன.

**பிரதோஷ பூஜை:**

கீழ்மருவத்தூர் வெங்கலக்ஷ்மி அம்மாள் அவர்கள் சுக்கிரவார பூஜையும், பிரதி மாதமும் பிரதோஷ பூஜையும் சுமார் 50 ஆண்டுகளாக நடத்தி வருகின்றார்கள். தமிழ் புத்தாண்டு அன்று எல்லா மூர்த்திகட்கும் திரு மஞ்சனங்கள் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள்.

**மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி:**

கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக, கோயில் அறங்காவலர் குழுத்தலைவராக திரு V. வரதா ரெட்டியார், B.A., B.L. அவர்களும், உறுப்பினர்களாக திரு T. இராமகிருஷ்ண ரெட்டியார் அவர்களும், திரு போ. சரவண நாயகர் அவர்களும் இருந்தபோது, மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியும், இரண்டு குழாய்களும் பொது மக்களின் நன்கொடை மூலம் நிறுவப்பெற்றன.

—)✕(—

# அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயில் கல்வெட்டுகள்

## SOUTH INDIAN INSCRIPTION

தென்னிந்தியக் கல்வெட்டுகள்

(பாகம் VII, பக்கம் 280)

### No. 447

(A. R. No. 233 of 1901)

On the North wall of the Gopura of the Atcheeswara Temple (Right of Entrance) at Acharapakkam, Maduranthakkam Taluk, Chingleput Dt.

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன் மஹா மண்டலேஸ்வரன் பாஷைக்குத் தப்புவராயர்
2. கண்டன் கண்டனுடு கொண்டு கொண்டனுடு குடாதான் துலுக்க தளவிபாடன்
3. பூர்வ தட்சண பச்சிம உத்ர சதுஸ்ஸமஸ்தராதிபதி ஸ்ரீ வீரப்பிரதாபன் ராயராய
4. சூடாமணிஈஸ்வர நரச குலோத்பவ ஸ்ரீகிருஷ்ணதேவ மகாராயர் பிரிதிவிராஜ்யம்
5. பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1450 மேற்செல்லா நின்ற விரோதிசம்

---

குறிப்பு : 447 முதல் 454 எண் வரையுள்ள எட்டு கல்வெட்டுகள், அனைவரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளன. மற்றவை கல்வெட்டுகளில் காணப்பட்டவாறு அப்படியே தரப்படுகின்றன. முதல் எட்டு கல்வெட்டுகளையும் படித்துப் புரிந்துகொண்டால், அதற்கு அடுத்துவரும் கல்வெட்டுகளை எளிதில் படித்து உணரலாம்.

குறில் நெடில், 'ந'கர 'ண'கர வேறுபாடுகளை ஊன்றிக் கவனித்துப் படித்தல் நல்லது.

6. வத்து சரத்து மேஷஞாயிற்று பூர்வ பட்ச பௌர்ணமாவா
சையையும் சுக்ரவாரமும் பெற்

7. (ற)விசாக நட்சத்திரத்துநாள் ஜெயங்கொண்ட சோழ
மண்டலத்து குளத்தூர் கோட்டத்து ஸ்ரீ மதுராந்தக

8. சதுர்வேதிமங்கலத்து தென்பால் தனியூர் திருவச்சிறுப்
பாக்கம் உடையார் ஆட்சிகொண்டருளிய மகாதேவ

9. ற்(கு) அகஸ்திய கோத்திரத்து போதாயன சூத்திரத்து
யஜுர் சாகாத்தியாபகரான தமுவக் குழைந்தா பட்ட
வுத்ரன்

10. உபய ப்ரதானியான வீர நரசிம்மராய நாயக்கர் ஸ்ரீ கிருஷ்
ணதேவராயற்குப் புண்ணியமாக

11. ஆனைக் குந்தி கவிலேஸ்வரன் சந்நிதியிலே சோமக் கிர
ஹண புண்ணிய காலத்திலே சகிரண்யோ(உ)தது

12. தார பூர்வம் ஆக நயினர் ஆட்சி கொண்டருளிய மகா
தேவற்கு சர்வ மான்யமாக ஜோடி

13. அரை மனையிற் கடுத்த முன் தொடைப்பித்து சர்வமான்
யம் ஆகப் பண்ணிக் குடுத்தோம்

14. இந்த தேவ ஸ்தானத்தில் கட்டாயம் காணிகளையும் இந்த
மகாதேவதுக்கே சர்வ மான்யமா

15. க பண்ணிக் குடுத்தோம் இந்த தர்மத்துக்கு அகிதம்
நினைத்தவன் கங்காதீர்த்திலே பிரம்ம

16. ஹத்தி கோணத்தி பண்ணின தோஷத்திலே மோட்சசா
வாறுகவும் ஸ்வதததாத்து சிகுண

17. புண்ணியம் ப்ரதத்தானுபாலனம் பரஸ்தத்தா சவதத்த
நிஷ்பலம் கவேத்

18. ஸ்வதத்தம் வா பரதத்தம் வா யோ கரோக வசன்ய ரே
சஷ்டில் வர்ஷ சகஸ்ரானே இஷ்டயாக்ஞாம்

19. யதே கிருமி. தேவ ப்ராமண வித்தானி நாசயந்தி அரந்தி
ச தேசாந் பாத ரஜோகித் வா சர்மநாபி

20. ஹிதாய ச தான பாலன யோர்ம்ம த்யே தானுத் சிரயோ
னுபாலனம் தானுத் ஸ்வர்க்க மகானுபோதிபா

21. லன நாரச்சுதம் பதம்.

## No. 448

### (A. R. No. 234 of 1901)

### On the East Wall of the Mandapa in front of the same temple, (Right of Entrance)

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கிரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு
2. ...வது (ஜ)யங் கொண்ட சோழ மண்டலத்துக் களத் தூர்க் கோட்டத்துத் தனியூர் ஸ்ரீம—
3. துராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் திருவச்சிறுபாக்கத்து உடையாராட்சி கொண்ட நாயனுற்கு அம்மைய—
4. ப்பன் சம்புவராயனேன் திருமேற்பூச்சுக்கும் திருப்பரி சட்டத்துக்கும் இந்நாயினுர் தேவதானந் திருவச்சிறுபா
5. க்கத்தில் த(றி)யிறை தட்டாரப் பாட்டமும் ஆசுவிகள் (பொது) மக்கள் பேரால் வந்த கடமையும் மன்ருடி கள் பேரால் (வ)—
6. ந்த கடமையும் செக்குக் கடமையும் இந்நாயனுற்குச் சிறுகாலேச் சந்தி திரும(ந்தி)ர போனசத்துக்கு அமுது செய்தருள இவ்வூர்.....

## No. 449

### (A. R. No. 235 of 1901)

### In the same place.

1. திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் ஜயங்கொண்ட சோழ
2. மண்டலத்துக் களத்தூற் கோட்டத்து அச்சிறுபாக்கத்து ஆட்சிகொண்ட மகாதேவ(ர்)
3. கோயிலில் ஆதமங்கலவன் அரயன் ஆட்கொண்ட நாயக னுன சேதிராயன் எழுந்தருளுவிக்—
4. கிற தேவர்க்கு இன்னுட்டு மதுராந்தகச் சதுர்வேதி மங்க லத்துப் பிடிகை விராலூர் நீர்நில—
5. ம்(ப)தின்(அறு)வேலியும் இவ்வூர்ப் புஞ்சை நிலமும் இத் தேவற்கு இறையிலி தேவதானமாக இடக்கட—
6. ...என்று இவன் சொன்னமையில் இப்படி செய்யக் கடவ தாகச் சொல்விக் கணக்கிலுமிட்டு...

## No. 450

(A. R. No. 236 of 1901)

In the same place.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 3- ஆவ—
2. து ஜயங்கொண்ட சோழமண்டலத்து களத்தூற் கோட் டத்துத் தனியூர் ஸ்ரீ மதுரா—
3. ந்தகச் சதுப்பேதி மங்கலத்து ஆளுடையார் ஆட்சி கொண்டருளிய மகாதேவ
4. ற்கு சோழ மண்டலத்துத் தென்கரை உய்யக் கொண்ட சோழவள நாட்டுச் செல்கலிற் செல்கலுடையான் குற்றியதே
5. தவன் ஆட்கொண்ட வில்லியேன் சேவகப்பெற்றி விட்டு வைத்த சந்திவிளக் கொன்றுக்குக் கொண்டு விட்ட ஆடு பன்னிரண்டு இவ்...

## No. 451

(A. R. No. 237 of 1901)

In the same place.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் திரிபுவன வீர தேவற்கு யாண்டு முப்பத்து அஞ்-
2. சாவது செயங்கொண்ட சோழ மண்டலத்துத் திருவச் சிறு பாக்கத்து உடையார்
3. ஆட்சி கொண்டருளிய தேவர் கோயில் சிவப்பிராமண ரோம் திருநுந்தா விளக்கு உபையங்
4. கொண்ட பரிசாவது இன்னுயனுர் கோயில் கைக்கோள ரில் பிச்சைத் தேவனு(ன) கிடாரத் தரைய—
5. -ன் சமைய சேனுபதி இந்நாயனுற்கு வைத்த திருநுந்தா விளக்கு ஒன்றுக்கும் கொண்ட பொன் 15 (ப)
6. இப்பொன் பதினேங் கழஞ்சும் கைக்கொண்டு இத்திரு நுந்தா விளக் கொன்றுஞ் சந்திராதித்தவரைச்
7. செலுத்தக் கடவோமாகச் சம்மதித்தோம் இக்கோயில் சிவப்பிராமண ரோ(ம்) இது பன் மகேஸ்வரத்(து) ரக்ஷை.

## No. 452

### (A. R. No. 238 of 1901)

On the south wall of the same Mandapa.

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீகோமாற பன்மரான திரிபுவனச் சக்கர வத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீவிக் கிரம பாண்டிய தே—
2. வ(ர்)க்கு யாண்டு அஞ்சாவது ம(லை) மண்டலத்து (கு)ளிச் சைப் பள்ளிகொண்டான் பூமனுன புவனி விச்சாதிர தேவனேன் செயங் கொண்ட சோ—
3. -ழ மண்டலத்துக் களத்தூற் கோட்டத்து மதுராந்தகச் சருப்பேதி மங்கலத்துத் தனியூர்த் திருஅச்சிறுபாக் கத்து உடையார் ஆட்சி கொண்ட—
4. ருளிய மகாதேவருடைய இளங்(கருணை)ப் பாவை நந்த வனஞ் செய்யுங் குடிகளுக்கு ... ... ...த்த நந்தவனத் துத் திருமண்டப(த்)து ஏறியருளின நாள் திருப் பாவாடை அமுது—
5. செய்தருள வேண்டுவனவுக்கும் விட்ட நீர்நிலமாவது ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் தென் பிடாகை கூனன் பட்டுக் காணி உடைய சர்வாதித்தன் பேரன் சோ(ம)ங்கலத்து அருளாள பட்—
6. டன் பக்கல்(க்) கொண்டுவிட்ட நிலமாவது இவ்வூர் கழனி யில் மடப்புறத்துக்குத் தெற்குத் தேன்பாக்கத்துக்கு நீர்(ப்)பாய்கிற வாய்க்காலுக்குக் கிழக்குத் தேனும்புலம் உட்படக் குழி இரண்டாயி—
7. ரத்து முன்னூறுங் கொண்டு விட்டேன் பூமனுன புவன வி(ச்சா)திர தேவனேன் இது பன்மாகேஸ்வர ரக்ஷை
8. இ(ந்) நிலத்தில் நாவல்(க்)கிணறும் இக்கிணறு சூழ்ந்த மரமும் இத்திரு நந்தவனக்கு(டிக்கு)இரண்டு மனையுங் கொண்டு விட்டேன் பூமனுன அவனிவிச்சாதிர தேவ னேன் இதுபன் மஹேஷ்வர ரக்ஷை:

## No. 453

(A. R. No. 239 of 1901)

In the same place.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு பன்னிரண்டாவது ஜயங் கொண்ட சோழமண்டலத்துகளத்தூ-
2. (ர்)க் கோட்டத்து தனி ஊர் ஸ்ரீமதுராந்தகச் சதுற்பேதி மங்கலத்து திரு(அ)வைச்சிறு பாக்கத்து உடையார் ஆட்சி கொண்ட நாயனுற்க்குச்-
3. செங்கேணி அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டான் கண்டர கூளியனுன இரா(ச)ரா(ச)ச் சம்புவராயனேன் இன்னுய நாற்க்குச் சாத்தஇ-
4. ட்ட திருவாபரணம் பட்டம் ஒன்றினுல் பொன் ஐம்பதின் கழஞ்சு மாற்று எட்டேகாலே அரைக்காலும் பட்டம் ஒன்றினுல் பொன்பதினெண்க—
5. ழஞ்சே கால்மாற்று எட்டரையும் இப்பட்டம் இரண்டுஞ் (சாத்தினேன் ராச சம்புவராயனேன் பன்மாஹேஸ்வர ரக்ஷை.)

(சோமாஸ்கந்தர் இடப்புறம் கீழ்ப்பகுதி)

## No. 454

(A. R. No. 240 of 1901)

In the same place.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 15வது (ஜ)யங்—
2. கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத் துத் தனியூர் ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதி ம—
3. ங்கலத்துத் திருவச்சிறுபாக்கத்து உடையாராட்சி கொண்ட நாயனுற்கு அத்திமல்ல நா(ந)
4. குலோத்துங்க சோழச் சம்புவராயனேன் கல்வெட்டு விச்சுக் குடுத்த பரிசாவது இந்நாயனுர் தேவதான—

5. ம் திருவைச் சி(று)பாக்கமும் நெற்குன்றமும் இவ்வூர்ப் பிடாகைகளும் புளியுண்ணியும் உள்ளிட்ட ஊர்களி—

6. ல் கண்காணி(ய)ர் நெல்லும் (ப)ாடி காவல் வெட்டி அரி முக்கை எடுத்துக் கொட்டி கொயிற்றமப் பெறுமு—

7. ள்ளடி க(ா)த்திகைக் கா(ண)ம் ஆசுவிகள் பொதுமக்கள் பேரால் வந்த கடமையும் தறியிறையும் பாட்டமும் வாணியர்—

8. பேராலு(ம்) மன்றுடிகள் பேர(ா)ல் வந்த கடமைகளும் சிகாரியப் பெறும் குற்றத் தண்டமுஞ் செட்டிறையு முள்(ளி)ட்ட கடமைகள்

9. பூசைக்குந் திருப்பணிக்கு முடலாகவே விட்டுக் கல்வெட்டுவித்துக் குடுத்தேன் குலோத்துங்க சோழச் சம்புவரா-

10. யனேன் இத்தன்ம மிறக்(கு)வார் கொள்கையிடைக் குமரி யிடைச் செய்தார் செய்த பாவங்கொள்வார் இதுபன்மா-

11. கேஸ்வர ரக்ஷை

## No. 455

(A. R. No. 241 of 1901)

In the same place.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்குயாண்டு ௨ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து களத்—

2. தூற் கோட்டத்துத் தநியூர் ஸ்ரீ மதுராந்தகச் சதுப்பேதி மங்கலத்து ஆளுடையார் ஆட்சிகொண்டருளிய தெவர் கோயிற் சிவ(ப்)பிராம்மண—

3. ரொந் திருநுந்தாவிளக் குபையங் கைக்கொண்ட பரிசாவது இம் மண்டலத்து ஆமுர்க் கொட்டத்து மொந்தூர் நாட்டு வெண்கலப்பா—

---

குறிப்பு: 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று துவங்குவது மூன்றும் குலோத்துங்கன் காலம்.

4. க்கத்துப் பாலமுழாந் வெளாந் அம்மையப்பந் தி(ரு)வச்சிறுபாக்க முடையாற்கு வைத்த திருநுந்தாவிளக்கொன்றுக்கு விட்ட எருமை

5. (ப)த்து இப்பத்துங் கைக்கொண் டித்திருநுந்தா விளக்கு ஒன்றுஞ் சந்தராதித்தற் செலுத்தக் கட—

6. வொமாக சம்மதித்தொ மிக்கொயில்ச் சிவ(ப்) பிராமணரொம் இது பந்மா கெஸ்வர ரக்ஷை

7. இவ்விளக் கெரிய இட்ட குத்து விளக் கொன்று

## No. 456

### (A. R. No. 242 of 1901)

### In the same place.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரம பாண்டிய தெவற்கு யாண்டு ௩-ஆவது செயங்கொண்ட சொழ ம-

2. ண்டலத்து ஒய்மாநாடான விசையராசெந்திர சொழ வள நாட்டு செவூ(ர்) நாட்டு செ(ச)வூ(ர்) கந்தமுழான் கூத்தன் திரு வெண்காடு தெவனுன பல்லவ—

3. ராயநெந் இ(ம்)மண்டலத்து ஸ்ரீமதுராந்தகச் ச(து)ர்வேதி மங்கலத்து தென்பிடாகையிற் தனிஊர் திருவச்சிறு ப(ா)க்கத்து ஆட்சி கொண்டருளிய தெவர்க்கு

4. வைகாசித் திருநாளுக்கு நான் குடிநிங்கா தெவதானமாக கொண்டு விட்ட வெள்ளரிப்பட்டு நஞ்செய்நிலமும் புன்சை நிலமும் கொல்லை—

5. (நி)லமும் எரிவாய் புறவடையுட்பட நாற்பாற்கொல்லைக்கு உட்பட்ட நிலம் குடிநிங்கா தெவதானமாக குடுத்தேன் திருவெண்—

6. காடு (தெ)தவனுன பல்லவ...... பொய்(தெ)யாடுற விலாதான் (செ)சவூர் பல்லவராயன் (த)ன் (ம)ம் (—)

## No. 457

(A. R. No. 243 of 1901)

In the same place.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திக(ள்) ஸ்ரீ வி(ர) பாண் டியதெவற்க்கு யாண்டு ௭-வது கற்கடஞாயற்று அபரப க்ஷத்து நா—
2. யற்றுகிழமை(யும்) ஸப்தமியும் பெற்ற அஸ்வதிநாள் ஜெயங் கொண்ட சொழ மண்டலத்து களத்தூர் கொட்டத்து ஸ்ரீ மதுராந்தக
